நாள்.20.02.2024

**அசல் வழக்கு எண். 156/2022**

<u>பி.வா.சா.1</u> - வாதி <u>தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வடிவேலுவின் தம்பி சுப்பையன்.வடிவேலுவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 4 பிள்ளைகள். அவர்களின் பெயர்கள். 1 பழனிவேல், 2.அண்ணாத்துரை. 3. பத்மாவதி.4. லீமா. சுப்பையனுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுப்பையன் பற்றி தெரியுமா என்றால் தெரியும். சுப்பையன் மனைவி தெரியுமா என்றால் தெரியும். அவர் பெயர் வள்ளியம்மை. வள்ளியம்மை எந்த ஊரில் பிறந்தவர் என்றால் தளிக்கோட்டை கிராமத்தில். வள்ளியம்மையின் சகோதரரி சுந்தராம்பாள். சுந்தராம்பாள் தற்பொழுது உயிருடன் உள்ளார். சுந்தராம்பாளின் மகள் கஸ்துாரி. சுந்தராம்பாள் அவரது மகள் கஸ்துாரி ஆகியோர்கள் எந்த ஊரில் உள்ளார் என்றால் தளிக்கோட்டையில் உள்ளார் கள். கஸ்துாரி இந்த நீதிமன்றத்தில் வாதி தரப்பில் சாட்சி சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். கஸ்துாரியின் மகள் பெயர் உஷா. உஷா என்பவரை சுப்பையன் மகன் கண்ணதாசன் என்பவர் திருமணம் செய்துள்ளார். அந்த திருமணம் 2002 ல் ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கண்ணதாசன் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கண்ணதாசனுக்கு எங்கு திருமணம் நடைபெற்றது என்றால் தெரியாது. கண்ணதாசன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது சித்தப்பா சுப்பையனின் மகன் தான் கண்ணதாசன். 2002 ல் கண்ணதாசனுக்கும், உஷாவிற்கு மதுக்கூரில் பதிவு திருமணம் நடைபெற்றது தெரியுமா என்றால் தெரியாது. உஷா தற்பொழுது எங்கு உள்ளார் என்றால் தெரியாது. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சுப்பையாவின் வாரிசுகளை பற்றி சொல்லியுள்ளார்கள் அதை பற்றி நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. சுப்பையன் தளிக்கோட்டை கிராமத்தில் நிறைய சொத்துகளை கிரையம் பெற்றுள்ளார். சுப்பையன் கிரையம் வாங்கிய சொத்துகள் தற்பொழுது யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. சுப்பையன் எவ்வளவு நிலம், யாரிடமிருந்து வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. எந்த வருடம் வாங்கினார் என்றால் தெரியாது. பாகம் பிரிப்பதற்கு முன்பாக கிரையம் பெற்றாரா அல்லது பாகம் பிரித்த பிறகு கிரையம் பெற்றாரா என்றால் பாகம் பிரிப்பதற்கு முன்பாகவும், பாகம் பிரித்த பிறகும் கிரையம் வாங்கியுள்ளார். பாகம்

பிரிப்பதற்கு முன்பாக எவ்வளவு சொத்து கிரையம் வாங்கியுள்ளார் என்றும், பாகம் பிரித்த பிறகும் எவ்வளவு சொத்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் தெரியாது. சுப்பைனுக்கு சொந்தமான எல்லா சொத்துகளையும் கிரையம் பெற்றுள்ளதாக எனது எதிர்வழக்குரை மற்றும் நிருபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ஆனால் எந்த வருடம் எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் வாங்கினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. 1972 ல் பாகம் பிரித்தபோது சுப்பையன் தளிக்கோட்டை கிராமத்தில் தான் இருந்தார். அதன் பிறகு எப்பொழுது சிங்கப்பூர் சென்றார் என்றால் தெரியாது. பாகம் பிரித்த பிறகு சுப்பையன் என்பவர் எவ்வளவு வருடம் தளிக்கோட்டை கிராமத்தில் இருந்தார் என்றால் வெளிநாட்டிலிருந்து இங்கு வந்து 10, 15 நாட்கள் தங்கிவிட்டு பின்னர் சென்றுவிடுவார். அதன்பிறகு அவர் இங்கு வரவில்லை. அவர் சிங்கப்பூர் நாட்டில் இறந்துவிட்டார். சுப்பையன் எந்த வருடம் இறந்தார் என்றால் ஞாபகமில்லை. பாகம் பிரித்துக்கொண்ட பிறகு பட்டாவை சுப்பையன் பெயரில் மாற்றிக்கொண்டாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுப்பையனுக்கு பாகப்பிரிவினை மூலம் கொடுக்கப்பட்ட சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் சுப்பையன் பெயரில் தான் உள்ளது. மொத்தம் சுப்பையனுக்கு பாகப்பிரிவினை மூலம் எவ்வளவு சொத்துகள் கொடுத்தார்கள் என்றால் தெரியாது. பாகப்பிரிவினை படி என் தந்தைக்கு எவ்வளவு பாகம் கொடுத்தார்கள் என்றால் தெரியாது. எவ்வளவு சொத்துகள் நான் அனுபவம் செய்துவருகிறேன் என்றால் 5,6 ஏக்கர் அனுபவம் செய்து வருகிறேன். சுப்பையனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் சர்வே எண் தெரியுமா என்றால் 127/10, 197, 130/10,127/8 மற்ற புல எண்கள் பற்றி ஞாபகமில்லை.எனது தந்தைக்கு பாகம் மூலமாக கிடைக்கப்பெற்ற சொத்திற்கு உண்டான சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அசல் வழக்கில் வா.சா.ஆ 3 ல் பாக பத்திரம் தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சுப்பையனின் வாரிசுகள் பற்றி சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. சுப்பையனுக்கு திருவள்ளுவன் என்ற ஒரு மகன் இருந்தாரா என்றால் தெரியாது. திருவள்ளுவன் உயிருடன் உள்ளரா அல்லது இறந்துவிட்டாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. திருவள்ளுவன் என்ற வாரிசை விட்டுவிட்டார்கள் என்று எனது வழக்கறிஞரிடம் சொல்லி கேள்வி கேட்கச் சொன்னேன். திருவள்ளுவன் என்பவர் சுப்பையன் மகன் என்ற விவரம் பற்றி யார் சொன்னார்கள் என்றால் எனது

மூத்தவர்கள் சொன்னார்கள். திருவள்ளுவன் இறந்துவிட்டார் என்று வந்தவர்கள் சொன்னார்கள். நான் சுப்பையனின் வாரிசுகள் பற்றி கேட்டுக்தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. சுப்பையனின் வாரிசுகள் சரோஜினிதேவி, கண்ணதாசன், தமிழரசி, கலாதேவி ஆகியோர்கள் இருப்பதாக சொல்லியுள்ளது சம்பந்தமாக நான் யாரிடமும் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. மேற்படி நபர்கள் சுப்பையனின் வாரிசுகளா இல்லையா என்று எனக்கு தெரியாது. புல எண் 127/10 ல் மொத்த விஸ்திரணம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி புல எண்ணில் சுப்பையனுக்கு மற்றும் வடிவேலுவிற்கு எவ்வளவு பாகம் என்றால் தெரியாது. புல எண் 127/10 ஏ-ல் 19 செண்டு நிலத்தை 15.07.1977 ல் விஸ்வலிங்கத்திற்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் கொடுத்த சொத்திற்கு தென்புறம் யாருடைய சொத்து என்றால் வடிவேலு , சுப்பையனுக்கு சொந்தமான சொத்து உள்ளது. 19 செண்டிற்கு தென்புறம் எவ்வளவு செண்டு உள்ளது என்றால் 70 செண்டு இருக்கும். மேற்படி 70 செண்டில் வடிவேல் மற்றும் சுப்பையனுக்கு எவ்வளவு செண்டு என்றால் தெரியாது. விஸ்வலிங்கம் கிரையம் பெற்ற சொத்தை தற்பொழுது வாதி கிரையம் பெற்றுள்ளார். 19 செண்டிற்கும் நான்கெல்லை போட்டு தான் கிரையம்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நான்கெல்லையில் சுப்பையன் சொத்திற்கு வடக்கு என போட்டு தான் விற்பனை செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் விஸ்வலிங்கத்திற்கு கிரையம் கொடுத்த 19 செண்டிற்கு தென்புறம் உள்ள சொத்து தான் வழக்கு சொத்து. தாவா சொத்தில் எள் சாகுபடி வாதி செய்யவில்லை நான் தான் செய்தேன். எப்பொழுது எள் சாகுபடி செய்தேன் என்றால் தெரியாது. எள் அறுவடை செய்தபிறகு வாதி தென்னம்பிள்ளை போட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் தான் தென்னம்பிள்ளை போட்டுள்ளேன். எனது நிருபணவாக்குமூலத்தில் தென்னம்பிள்ளை போட்டுள்ளதை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் எனது நிருபணவாக்குமூலத்தில் எள் சாகுபடி செய்துள்ளதாக சொல்லவில்லை என்றும் , இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சுப்பையன் குடும்பம் தற்பொழுது நல்ல வசதியாக தான் உள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுப்பையனிடம் பணம் கொடுத்து எழுதி வாங்கியுள்ளோம். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் வாங்கினேன் என்றால் தெரியாது. நான் எழுதி வாங்கிய பத்திரங்களை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது எதிர்வழக்குரை மற்றும் நிருபணவாக்குமூலத்தில் எழுதி வாங்கியதாக சொல்லவில்லை என்றும், இந்த வழக்கிற்காக பொய்யாக எழுதி வாங்கியுள்ளதாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சுப்பையனின் வாரிசுகள் யார் என்று எனக்கு தெரியும் என்றும், நான் வேண்டுமென்றே இந்த வழக்கிற்காக தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தளிக்கோட்டையை சேர்ந்த கயிலாசம் மகள் கண்ணகியை எனக்கு தெரியும். 2019 ல் புல எண் 53/7-ல் 19-1/2 ஏர்ஸ் நிலத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் தெரியாது. சுப்பையன் மகள் தமிழரசி என்பவரிடமிருந்து கண்ணகி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தமிழரசி தளிக்கோட்டை வந்து தான் கிரையம் செய்து கொடுத்தாரா என்றால் தெரியாது.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.